பக்கங்கள்: பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 23 வியாழக்கிழமை (09-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 246

### அரசை கடுமையாக விமர்சித்து வந்த

## சிங்கள வார இதழ் ஆசிரியர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

கொழும்பு, செப். 9

அரசாங்கத்தை விமர்சித்துக் கட்டுரைகளை வெளியிட்டு வந்த ''சட்டன'' (போராட்டம்) என்ற சிங்கள வார இதழ் ஆசிரியர் றோகண குமார நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மிரியனவில் இருந்து ஒட்டோ ஒன்றில் அவர் பொறளை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் நுகேகொடையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ள உயர்மட்டக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணிகளை அகற்ற வந்த

## ஸிம்பாப்வே நிபுணர் மிதிவெடியில் சிக்கினார்!


யாழ்ப்பாணம், செப். 9

குடாநாட்டில் கண்ணிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஸிம்பாப்வே நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கும் நிபுணர் ஒருவர் நேற்றுக் காலை அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்தார்.

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிப் பகுதியில் இந்த நிபுணர் குழு மிதிவெடிகள் கண்ணிவெடிகள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது என்றும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

# எலும்புக்கூடுகளை உடனடியாக அடையாளம் காணமுடியாத நிலை!



ஒருபுறம் ஆயுதப் போராட்டம்... மறுபுறம் கோவணப் போராட்டம்...!

## தடயப்பொருள் எதுவும் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 9

செம்மணியில் கடந்த திங்கள் முதல் மூன்றுநாள்களாக இடம்பெற்ற தோண்டும் பணிகளின்போது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை உடனடியாக அடையாளம் காண வாய்ப்பு இல்லை என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். தடயப் பொருள் எதுவும் இந்த எலும்புக்கூடுகளுடன் மீட்கப்படாததே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மரபணு (டி என் ஏ) பரிசோதனை மூலமே இந்த எலும்புக்கூடுகளை அடையாளம் காண முடியும் என்றும் — மரபணுப் பரிசோதனை செய்வதானால் கொழும்பிலேயே அதனைச் செய்ய முடி

(10ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஐ.தே.கட்சி இளைஞர் அணி நேற்று நடத்திய கோவண போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## செம்மணியில் நேற்று 3 ஆவது நாளாகத் தோண்டும் பணி!

யாழ்ப்பாணம், செப் 9

செம்மணிப்பகுதியில் — கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான முன்னாள் படையினர் ஐவரில் சோமரத்ன ராஜபக்ஷ, பெரேரோ ஆகியோர் அடையாளம் காட்டிய — செம்மணி சோதனைச்சாவடிக்கு முன்பாகவுள்ள — பிரதேசத்தில் தோண்டும் பணிகள் நேற்றும் தொடர்ந்து இடம் பெற்றன.

செம்மணி — கண்டி வீதிக்கு தெற்குப்புறமாக செம்மணி நுழைவாயில் பிள்ளையார் கோவிலுக்கும் சோதனை நிலையத்துக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசம் புல்டோசர் மூலம் 3 அடி ஆழத்துக்குச் சமப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் 5 அல்லது 6 இடங்களில் 12 க்கு மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சோமரத்ன

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. இளைஞர்கள் கோவணத்துடன் ஊர்வலம்

கொழும்பு, செப். 9

அரசாங்கம் அறிமுகம் செய்துள்ள புதிய கல்விச் சீர்திருத்தச் சட்டத்தைக் கண்டித்து ஐ தே. க. இளைஞர் அணியினர் கோவணத்துடன் ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

லிப்டன் சதுக்கத்தில் நேற்றுப் பிற்பகல் கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட ஐ. தே. க. இளைஞர் அணியினர் கல்விச் சீர்திருத்த சட்டத்துக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

அதன் பின்னர் கோவணம் அணிந்த 30 க்கு மேற்பட்ட இளைஞர்கள் ஊர்வலமாகச் சென்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தில் மகஜர் சமர்ப்பித்தனர்.

இந்தப் போராட்டத்தை ஒட்டி அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (இ-3)

## போலியோ சொட்டு மருந்து வழங்கும் நான்கு நாள்களில் மோதல் தவிர்ப்பு!

### அரசு - புலிகள் இணக்கம் எனத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 9

யுனிசெவ் அமைப்பின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுதினமும் —

அடுத்த மாதம் 15 ஆம் 16ஆம் திகதிகளிலும் — இடம்பெறவுள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணிகளையொட்டி இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகள் இயக்கமும் அந்தத் தினங்களை அமைதி நாள்களாகக் கடைப்பிடிக்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இது விடயமாக யுனிசெவ் அமைப்பு விடுத்த கோரிக்கையை விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் ஏற்றுள்ளன என அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இது விடயமாக இரு தரப்பினருக்கும் தமது அமைப்பு விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்று இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி செய்திக் குறிப்பு மூலம் அறிவித்துள்ளார். (இ-3-9)

## பக்தி பூர்வமாக நிகழ்ந்த நல்லூர் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 9

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர் புடைசூழ பக்தி பூர்வமாக நேற்று நடைபெற்றது.

கந்தன் தேரில் ஆரோகணித்து வரும் காட்சியைக் காண அதிகாலையில் இருந்தே பக்தர் கூட்டம் ஆலயத்தில் அலைமோதியது.

காவடி எடுத்தும் அங்கப்பிரதிஷ்டை செய்தும் அடி அழித்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் பக்தர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

அதிகாலை முதல் பிற்பகல் வரை பக்தர் கூட்டத்தால் நல்லை நகரமே நிறைந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மருத்துவ சங்க மாநாடு

யாழ் மருத்துவ சங்கத்தின் 11 ஆவது வருடாந்த விஞ்ஞான மாநாடு இன்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மருத்துவ சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறும் இன்றைய ஆரம்ப நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் என். ஜெகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். மருத்துவ பீடாதிபதி டாக்டர் ஆர். இராஜேந்திர பிரசாத் விசேட உரை நிகழ்த்துவார்.

டாக்டர் திருமதி ஜே. கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் பிற்பகல் நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். (இ-3)

## புளொட் உறுப்பினர் தடுத்து வைப்பு

வவுனியாவில் கோயில்குளம் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடிய புளொட் அமைப்பின் 12 உறுப்பினர்கள் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அவர்களில் 7 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் —

ஐவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அவர்கள் எடுத்துச்சென்ற சகல ஆயுதங்களும் பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (இ-3)

# மீண்டும் சனியன்று போலியோ மருந்து

யாழ்ப்பாணம், செப். 9

போலியோவை முற்றாக இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ் மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமையும் பின்னர் ஒக்ரோபர் 16 ஆம் திகதியும் சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு —

போலியோ என்னும், சிறுவர்களை முடமாக்கியும், கொன்றும் வந்த கொடிய நோயை உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கத்தோடு உலகளாவிய ரீதியில் தேசிய எதிர் சக்தி அளிக்கும் தினங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கையில் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் இவ்விசேட மருந்து கொடுக்கும் செயற்பாடு நடைபெற்று வருகிறது.

இவ்வருடம் செப்ரெம்பர் 11 ஆம் திகதியும், ஒக்ரோபர் 16 ஆம் திகதியும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது. சகல பத்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கும் இந்தத் தினங்களில் தடை மருந்து கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு போலியோ சொட்டு மருந்து பூரணமாகக் கொடுக்கப்பட்டவர்கள், கொடுக்கப்படாதவர்கள் என்ற பேதமின்றி மேலதிகமாக இவ்விரு தினங்களிலும் தடை மருந்து கொடுக்கப்படவேண்டும்.

★ வைத்திய சாலையில் உள்ள பிள்ளைகளுக்கும் இம் மருந்து கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

★ மக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு மேலதிக நிலையங்கள் எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

★ அன்றைய தினம் தமது பகுதியிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளவர்கள் அவ்வப்பகுதியில் இம் மருந்தைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.

★ தேசிய தடை மருந்து கொடுக்கும் திட்டத்துக்கு உலக சுகாதார நிறுவனம், 'யுனிசெவ்' நிறுவனம், சர்வதேச றோட்டரிக் கழகம், சர்வதேச அரிமாக் கழகம் ஆகியவை உதவி வருகின்றன.

★ மேலதிக விவரங்களை அவ்வப்பகுதி சுகாதார ஊழியர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ 'எல்லோரும் சேர்ந்து போலியோவை உலகத்திலிருந்து ஒழிப்போம்— என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)


## தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட பொதுக் கூட்டம்

காலம்: 14-09-99 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி.

இடம்; டி. எம். ஐ. கல்வி நிலையம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்,
தொண்டர் ஆசிரியர் சங்கம், யாழ். மாவட்டம்.

(68884)

## STP COMPUTER WORLD

10 Days Free Classes ! ! !

ஆரம்பம்: 10-09-1999 வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணி

உங்களுக்குரிய நேர அட்டவணையை முன் கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்.

STP COMPUTER WORLD
No. 54A, Palaly Road, Kanthamadam, Jaffna.

(68887)


## லயன் ஏயார் அனர்த்தம்:

# இருவரது பொருள்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் இரணைதீவில் காணாமற்போன 'லயன் ஏயார்' விமானத்தின் தடயப்பொருள்களில் இருவரது பொருள்கள் நேற்று அவர்களது உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டன.

இந்த விமானத்தில் பயணம் செய்த சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த திருமதி சி. அற்புதமலர் செல்வி சி. சிவகீர்த்தா ஆகியோரது அடையாள அட்டைகள் மற்றும் சாதகக் குறிப்புக்களை அவர்களது உறவினர் அடையாளம் காட்டினர்.

இவற்றை அடையாளம் காட்டிய கனகசபைசிவபாதம் என்பவர் தனது மகளை திருமணத்துக்காக கனடாவுக்கு அனுப்புவதற்காக தனது மனைவி அவரை அழைத்துச் சென்ற சமயம் இந்த அனர்த்தத்தில் சிக்கினார் என்று தெரிவித்தார்.

தடயப்பொருள்கள் மக்கள் பார்வைக்காகயாழ். பொலீஸ் நிலையத்தில் இன்றும் வைக்கப்பட்டிருக்கும் என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-5)

### சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேநேரம் — இந்த விவகாரத்தை ஐ. தே. க. நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய சமயம் சபையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராகக் கோஷமிட்ட ஐ.தே.க. உறுப்பினர் மேர்வின் சில்வா சபை நடவடிக்கைகளில் நேற்றுப் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டது. சபாநாயகர்அவரை சபையில் இருந்து வெளியேற்றினார்.

இந்த கொலைச் சம்பவத்தை சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு உட்பட பல அமைப்புக்கள் கண்டித்துள்ளன. (இ-3)

### எலும்புக்கூடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் என்றும் —

இதற்குக் காலதாமதம் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செம்மணியில் புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

முதல் நாளான திங்கட்கிழமை எலும்புக்கூடோ அல்லது எச்சங்களோ கண்டுபிடிக்கப்படவில்லை. இரண்டாம் நாளான நேற்று முன்தினம் இரு எலும்புக்கூடுகளும்நேற்று ஓர் எலும்புக்கூடும் கண்டுபிடிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட இந்த மூன்று எலும்புக்கூடுகளும் ஆடைகள் அற்ற நிலையில் இருந்தன.

இந்த எலும்புக்கூடுகளுக்குரியவர்கள் தொடர்பான தகவல்களைப் பெறத் தடயப் பொருள்கள் மீட்கப்படாததாலும் —

ஏற்கனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் இந்தப் புதைகுழிகள் தொடர்பாகத் தகவல்கள் கிடைக்காததாலும் — பொதுமக்களை அழைத்து அவற்றை அடையாளம் காணமுடியாதுள்ளது என்று நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அவை ஆய்வுக்காக காலிறுகுணு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்படும்.

அதன் பின்னரே அடையாளம் காண முயற்சி எடுக்கப்படும் என்று நிபுணர்கள் தெரிவித்தனர். (இ-3-6)

### ஸிம்பாப்வே...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்தச் சமயம் அந்தக் குழுவில் அங்கம் பெறும் நிபுணரான சோக்கோ என்பவர் மிதிவெடியில் சிக்கினார் என்றும் —

அது வெடித்ததில் முகத்திலும், கால்களிலும் காயங்களுக்குள்ளான அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காக மோப்ப நாய்கள் சகிதம் யாழ். வந்துள்ள ஸிம்பாப்வே நிபுணர்குழு கண்ணிகளைக் கண்டுபிடித்து அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே. (இ-3-5-15-139)

# பரிசில் நாள்

யாழ்ப்பாணம், செப். 9

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 'பரிசில் நாள்' எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-9)

## கருத்தரங்கு

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி அதிபர் ம. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா 'சுவாமி விவேகானந்தரின் அதிவிசேட தீர்க்க தரிசனம்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (இ-க)

## அருகிலுள்ள முகாமில்

# வாகனங்களை பதியுமாறு படைத்தரப்பு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 9

குடாநாட்டு மக்கள் தமது வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை அருகில் உள்ள இராணுவ முகாமில் பதியுமாறு யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் வசிக்கும் பொதுமக்களுடைய மோட்டார்சைக்கிள் மற்றும் வாகனம் போன்றவற்றைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களும் அழிவுச்செயல்களை மேற்கொள்ளப் பயன்படுத்தி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளன.

இவ்வாறு பொதுமக்களின் வாகனங்களைப் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திவிட்டு அவற்றைப் பொது இடங்களில் கைவிட்டுச்செல்வது வெடிமருந்தை நிரப்பிக் குண்டுத் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச்செல்வது போன்ற சம்பவங்களால் வாகன உரிமையாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இதனால் பொதுமக்களின் நன்மைகருதி யாழ்.மக்களாகிய நீங்கள் உங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை அருகில் உள்ள இராணுவ முகாமில் பதிவு செய்யும்படி பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது— என்றுள்ளது. (இ)

### செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ராஜபக்ஷ ஏற்கனவேஅளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார்.

அவர் அடையாளம் காட்டிய இடங்கள் தவிர்ந்த மற்றொரு இடத்தில் இருந்து நேற்று முன்தினம் இரு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன.

இந்தப் புதைகுழியில் நிலத்தடி நீர்மட்டத்துக்கு கீழ் மேலும் எலும்புக் கூடுகள் உள்ளனவா என்பது குறித்து அறிய மீண்டும் நேற்றுக் காலை அந்தப் புதைகுழி தோண்டப்பட்டது.

அங்கு எதுவும் கிடைக்காததை அடுத்து அதற்கு சமீபமாக—புதைகுழி இருக்கும் இடம் அடையாளம் காணப்பட்டு அது தோண்டப்பட்டது.

அங்கிருந்து நீட்டி நிமிர்ந்து படுக்கவைத்தவாறு இருந்த சடலத்துக்குரிய எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஐயரும் அவரது உதவியாளரும் கொல்லப்பட்டு மோட்டார் சைக்கிளுடன் புதைக்கப்பட்ட புதைகுழி ஒன்று இருப்பதாக ஏற்கனவே குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருந்ததால், மின்னியல் கருவிகள் மூலம் தேடுதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் இருப்பதற்கான சாத்தியமும்—

மேலும் சடலங்கள் இருப்பதற்கான சாத்தியங்களும்— இல்லாத நிலையில் அந்தப் பிரதேசத்தில் தோண்டும் பணிகள் நேற்று மாலை 3 மணிக்கு நிறுத்தப்பட்டன.

செம்மணி — நாயன்மார் கட்டு வீதியில் செம்மணிச் சந்திக்கு அருகில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் இன்று தோண்டும் பணிகள் இடம்பெறும். (இ-3-6)

### பக்தி,..

(முதலாம் பக்கத் தொடர்)

வழிந்தது.

ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் வசதி கருதி குடாநாட்டில் சகல இடங்களில் இருந்தும் விசேட பஸ் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஏற்பாடு செய்திருந்தது.

நல்லூர் தேர் உற்சவ நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடியாக அஞ்சல் செய்தது.

நகரில் உள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இன்று காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும். (இ-3-5-9-15-30-103-86-31-139)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 9 09 1999 இல் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அரியகுட்டி சுப்பிரமணியம்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சுப்பிரமணியம் (முன்னாள் மேற்பார்வையாளர் யாழ். மாநகர சபை) நேற்று 08—09—1999 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சுலோசனாதேவி (கனடா), இரவீந்திரன் (யாழ். மாநகர சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜகுலேந்திரன், மாலினி (உதயன் பணிமனை—யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சசிராஜ் (கனடா), ஜெயந்தராஜ் (கனடா), பிரதீப்ராஜ் (கனடா), கெவின் (கனடா), லக்ஷன், லக்ஷனா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (08-09-99) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சு. மங்கையர்க்கரசி
(மனைவி)

''தேவி வாசா'',
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(68865)

## திருமதி கனகலிங்கம் இரத்தினாவதி

62/8, பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகலிங்கம் இரத்தினாவதி 08-09-1999 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு சிவயோகத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற குழந்தைவேலு சவுந்தரத்தின் மருமகளும் யதுஷன், லக்ஷ்மன், குகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பரமானந்தம், பராசக்தி, குணவதி (கனடா), பேரானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கண்மணிராசா (வவுனியா), சண்முகராசா (சுதுமலை—வர்த்தகர்), விமலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-09-99) வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் கல்கிசையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கோள்கிறோம்.

தகவல்:
சு. சண்முகராசா
(மைத்துனன்)

62/8, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(68876)

## திருமதி நீற்றா ஜெயந்தி செபமாலை

பலாலி அன்ரனிபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து, குடத்தனை கரையூரில் வசித்து வந்த திருமதி நீற்றா ஜெயந்தி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் அவறாம்பிள்ளை–செபமாலையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் நிக்டன் (லண்டன்), நிக்ஷன் (லண்டன்), லிக்ஷன், மேரிஸ்ரலா, ஜெனிஸ்ரலா (இந்தியா), மரியஸ்ரலா, வனஸ்ரலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானசகாயம் (இந்தியா), தேவறஞ்சன் (வவுனியா), ஜெயசுதர்சன், மேரிகில்டா ஆகியோரின் அருமை மாமியும் ஜாக்ஷன், சிந்துஜா, மரீனா, சிந்து, சுகந்தி, விவேக், வினோத், மக்ஸின், மன்சீனா, ரவிக்குமார் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
அ. செபமாலை
(கணவன்)

குடத்தனை.

(68875)

## பற்றிக் லோறன்ஸ்

(யாழ். ப. நோ. கூ. ச)

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட பற்றிக் லோறன்ஸ் அவர்கள் 06-09-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பற்றிக்–ஜோசப்பின் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அகஸ்ரின்—பிரான்சிஸ்கா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பத்தின் அன்புக் கணவரும் டிலாணி, சிராணி, அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேர்ச்சின் மாமனாரும், காலஞ்சென்ற கத்தறின் மற்றும் சேவியர், றோசலின், அன்ரன், பீற்றர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09-09-99) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் (புதிய நேரம்) 16, புதுவீதி, கொய்யாத்தோட்டத்திலுள்ள இல்லத்திலிருந்து கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோ. அரவிந்தன்
(மகன்)

16, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்.

(68885)

## இன்னிசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் வழங்கும் 'புத்தாயிரமாண்டு இன்னிசை அருவி' நிகழ்ச்சி இன்றும் 10, 11, 12 ஆம் திகதிகளிலும் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 5.00மணி வரை யாழ். கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும். (இ-ரி)

## சாரணர் கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரால் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சாரணர் தலைவர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான (ஆசிரியர்கள்) கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டரை மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

(இ-152)

## மட்டு. ஆசிரியர்கள் இருவர் கைது

கொழும்பு, செப். 9

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையைப் படுகொலை செய்யும் திட்டமொன்றுக்காக அமைச்சரின் நடமாட்டங்கள் குறித்த தகவல்களைச் சேகரித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த தமிழர்களான ஆசிரியை ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவரும் கண்டிக்குச் சென்று அமைச்சரின் நடமாட்டங்கள் குறித்த விவரங்களைச் சேகரித்து விடுதலைப்புலிகளுக்கு அறிவித்து வந்துள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

(ஐ-8)

## இளைஞர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்ட இளைஞர் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இளைஞர்களுக்கான கடன் திட்டங்கள் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது. (ஐ-5)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
அஜித்குமார் – ஷாலினி
நடித்த
அமர்க்களம்
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68664)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன்
நடித்த
செங்கோட்டை
காட்சிகள் 11.00, 2.30
/ புதிய நேரம் /
(68745)

ராஜா
யாழ்ப்பாணம்
இன்று முதல்
மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
10-30, 2-30
(புதிய நேரம்)
(68858)


## சிரேஷ்ட சாரணியர் குழாம் ஆரம்பம்

சிரேஷ்ட சாரணியர் குழாத்தில் இணைய விரும்பும் 17 — 23 வயதுக்கிடைப்பட்ட பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் சாரணிய மாவட்ட ஆணையாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

- திருமதி கி சிவராஜா
  6, முனாமலை வீதி, மானிப்பாய்.
- திருமதி நீ. தர்மகுலசிங்கம்
  யா / பெரியபுலம் ம. வி. யாழ்ப்பாணம்.
- செல்வி மேகலா துரைராஜா
  யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

(சி/8864) — செயலாளர்

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா திருச்செல்வம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா திருச்செல்வம் 5 - 9 - 99 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா — செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் பூபதிப்பிள்ளை, காலஞ்சென்ற இராசமணி, இராசதுரையின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்துரை, சுப்பிரமணியம், கனகம்மா, சோமசுந்தரம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீஸ்கந்தா (கனடா), மாலதி (கொழும்பு), ரதி (ஆசிரியை, யா / கொக்குவில் இந்துக் கல்லூரி), ஸ்ரீதரன் (லண்டன்), கௌரி (லண்டன்), செல்வக்குமார் (கனடா), ரேவதி (கனடா), ஜெயந்தன் (ஆதித்தா றேடிங், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் (101, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு — 13), லோகேஸ்வரி (கனடா), சந்திரநாதன் (நிர்வாக உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), உதயகுமார் (லண்டன்), செல்வராஜா (கனடா), உஷா (கனடா), சுதாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகுணன் (கனடா), அமுதன் (லண்டன்), சுகந்தினி (கொழும்பு), கார்த்திகாயினி (கொழும்பு சைவமங்கையர் கழகம்), இராகுலன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), மதூசன் (யா / கொக்குவில் இந்துக் கல்லூரி), துவாரகன், கோபிகன் (யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), தனா, தானியா, செலீனா, வித்தியா, தாமிகா (கனடா), மயூரதன், அபிரதன், யதூஷா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (9-9-99) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

முதலிகோயில் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(68889)

## வல்லிபுரம் சுப்பிரமணியம்

கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டையைச்சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியம் (முன்னாள் உரிமையாளர், ராணி ஸ்ரோர்ஸ், 93/3, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்) அவர்கள் 8—9—99 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் பூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தவயோகம், செல்வராணி, நாகராசா, அம்பலவாணர், தனபாலசிங்கம், சுந்தரலிங்கம், கனகரட்ணம், சறோஜா, பத்மாவதி, ஜெகதீஸ்வரி, தர்மராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, விஜயரட்ணம், நாகபூஷணி, தனலக்ஷ்மி, ராசாத்தியம்மா, குகேஸ்வரி, ஜெயமலர், மகேந்திரன், கணேஸ், இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திருநாவுக்கரசு, உதயகுமார், வரதராஜன், சுபத்திராதேவி, சுரேந்திராதேவி, சந்திரசேகர், சிறிதரராஜசேகர், நாகேஸ்வரன், நாகேந்திரன், நாகபிரியா, ரூபன், முரளி, தீபன், சங்கீதா, தினேஸ், தனூசன், தனுசியா, சரண்ஜா, சணஜீவன், பேபிநிசா, லகஷனா, லக்சிக்கா, சேந்தனா, சிந்துஜா, ரஜனியா, மோகனரஞ்சனி, கோபிகா, கீர்த்திகா, வித்யபிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் தர்சிகன், யசிந்தா, ராம்கி, லூஜி, டயன், விதுஷா, தனுஷன், சாரங்கா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (9—9—99) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இரவீந்திரன்
(மருமகன்)

கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை.

(68886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமோர் தலைவர் விடுதலையானார்

ஜகார்த்தா, செப். 9

**கிழக்குத் திமோர் விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸனானா குஸ்மோ சிறையில் இருந்து செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.**

கிழக்குத் திமோருக்குச் சுதந்திரம் வழங்கப்படவேண்டுமா என்பதை முடிவு செய்ய நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் அமோகமாக மக்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து குஸ்மோவை இந்தோனேசியா விடுதலை செய்துள்ளது. திமோரில் சுதந்திரத்தை எதிர்க்கும் இந்தோனேசிய சார்புக் கிளர்ச்சியாளர்களின் அராஜகம் தலைவிரித்தாடும் ஒரு கட்டத்தில் குஸ்மோவின் விடுதலை திமோர் மக்களுக்குப் புதிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

வன்முறைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது தாயகத்தில் அமைதியைக் கொண்டுவரப் பாடுபடப்போவதாக விடுதலை பெற்ற கையோடு குஸ்மோ தெரிவித்தார்.

கிழக்குத் திமோரின் சுதந்திரத்துக்காக நடத்தப்பட்ட கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த குஸ்மோவை இந்தோனேசிய அரசு இவ்வாண்டு முற்பகுதியில் வீட்டுக் காவலில் வைத்தது.

(ஐ-க)



ஸனானாகுஸ்மோ

## ஷெரீப்புக்கு எதிராக புதிய கூட்டணி

இஸ்லாமாபாத், செப். 9

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிரா மாபெரும் கூட்டணி ஒன்றை பாகிஸ்தானிய எதிர்க்கட்சிகள் உருவாக்கியுள்ளன.

முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, அவாமி தேசியக் கட்சி இம்ரான்கான் தலைமையிலான கட்சி உட்பட மொத்தம் 19 கட்சிகள் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும்.

இந்தக் கூட்டணியின் நோக்கம் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை பதவியில் இருந்து அகற்றும் வரை எதிர் புநடவடிக்கையில் ஈடுபடுவதுஎன்று ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

ஷெரீப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நாடு முழுவதும் நடத்த இக்கூட்டணி ஏற்பாடு செய்து வருகிறது.

[ஐ-க]

## காஷ்மீர் முதல்வர் தப்பினார்

புதுடில்லி, செப் 9

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லாவைக் குறி வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இருந்து அவர் தப்பியுள்ளார்.

சிராம் கோட்பூஞ் வீதியில் வைக்கப்பட்டிருநத அதிசக்தி வாய்ந்த குண்டு முதலமைச்சரின் வாகன அணி வீதியைக் கடப்பதற்கு சற்று முன்னர் வெடித்தது. இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதேவேளை —

குண்டு வெடித்த சமயம் அப்துல்லா சம்பவ இடத்தில் இருந்து இருநூறு மீற்றர் தூரத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார் என பொலீஸார் தெரிவித்தனர்.

# ராணுவச் சட்டம் அமுல்: ஜகார்த்தாவுக்கு ஐ. நா. அவகாசம்

## சர்வதேச அமைதிப் படை திமோர் செல்லும்

டிலி, செப். 9

அராஜகங்கள் தலை விரித்தாடும் கிழக்குத் திமோரில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இந்தோனேசிய அரசுக்கு ஐ.நா. செயலாளர் கோபி அனான் 48 மணிநேர அவகாசம் வழங்கியுள்ளார்.

சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு அங்கு அமைதி பேணப்படாவிட்டால் சர்வதேச சமூகம் வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இருக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை — சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வசதியாக கிழக்குத் திமோரில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறும் ஜகார்த்தா அரசு கிழக்குத் திமோரில் எவ்வித வெளிநாட்டுத் தலையீடுகளையும் அனுமதிக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

கிழக்குத் திமோருக்கு விஜயம் செய்த ஐ நா. தூதுக் குழுவினரிடம் ஜகார்த்தாவின் இந்த நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இராணுவச் சட்டம் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்று ஜகார்த்தா கூறிய போதிலும் கிழக்குத் திமோர் தலைநகர் டிலியில் வன்செயல்கள் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்குத் திமோரில் சுமார் எட்டு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். போர்த்துக்கேயரின் கொலனியாக இருந்த இப்பகுதியை 1975 ஆம் ஆண்டு இந்தோனேசியா ஆக்கிரமித்தது அடுத்த ஆண்டு அதனை தனது மாகாணமாக இணைத்துக்கொண்டது.

கிழக்குத் திமோர் நிலைவரம் மோசமானால் ஆஸ்திரேலியாவின் தலைமையில் சர்வதேச அமைதிப்படை ஒன்று அங்கு தரையிறக்கப்படலாம் என்று ஐ.நா. சபையுடன் தொடர்புடைய ராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

சர்வதேச அமைதிப்படை ஒன்றை ஏற்கும் கட்டத்துக்கு இந்தோனேசிய அதிபர் ஹபீபீ வந்துள்ளார் என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுணர் தெரிவித்தார்.

[ஐ]

## எதென்ஸை உலுக்கிய பெரும் நிலநடுக்கம்

### 38 பேர் பலி! பலர் காயம்!!

எதென்ஸ், செப். 9

கிறீஸின் தலைநகர் எதென்ஸ் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 38 பேர் வரை உயிரிழந்தனர். 70 பேர் வரை காயமடைந்தனர்.

பத்து விநாடிகள் நீடித்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.9 எனப் பதிவாகியது.

நூறுக்கு மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இந்த இடிபாடுகளில் பல நூற்றுக்கணக்கானோர் சிக்கியிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

பாதிப்புக்குள்ளான மக்கள் நகரை விட்டு வெளியேறி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின் எதென்ஸில்ஏற்பட்ட மிக மோசமான நில நடுக்கம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது

[ஐ-க]

### உலக அரங்கில்

# பயங்கர நகரமாக காட்சி தரும் டிலி; துண்டித்ததலைகள் வீதியில்காட்சிக்கு

கான்பரா, செப். 9

கிழக்கு திமோரின் தலைநகரான டிலி தற்போது பயங்கர நகராக காட்சியளிப்பதாக அங்கிருந்து வெளியேறி ஆஸ்திரேலியா சென்றடைந்தோர் தெரிவித்துள்ளனர்.

உடலில் இருந்து கொய்து எடுக்கப்பட்ட தலைகள் தடிகளில் குத்தப்பட்டு வீதியோரங்களில் நாட்டப்பட்டு பார்வைக்கு விடப்பட்டிருப்பதாகவும்—

அரசசார்பானமக்கள்படையினர் திமோர் மக்களைத் துப்பாக்கி மற்றும் கத்திகளால்தாக்கி கொடும் செயகளில் ஈடுபட்டு வருவதாகவும் ஆஸ்திரேலியாவை வந்தடைந்துள்ள ஆஸ்திரேலிய மற்றும் கிழக்குத், திமோர் மக்கள் கூறுகின்றனர்.

''அராஜகத்தை நான் கண்டேன். எல்லா இடங்களிலும் பீதியடைந்த மக்களின் அறிகுறிகளையே பார்த்தேன். அது ஒரு பயங்கர நகரம்'' என்று டிலியில் இருந்து முதன்முதலாக வெளியேற்றப்பட்டு டார்வினை வந்தடைந்த நபர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

உருக்குலைந்த சடலங்கள் துண்டாடப்பட்டுத் தடிகளில் குத்திவைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தலைகளும் பாதை ஓரங்களில் இருப்பதாக ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கும் கிழக்குத் திமோரியர்களின் எதிர்ப்பு முன்னணித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ க)

## வேட்பாளர் நிலக்கண்ணிக்கு பலி

புதுடில்லி, செப். 9

ஜம்மு காஷ்மீரின் அனந்நாத் தொகுதியின் பாரதீய ஜனதாக்கட்சி வேட்பாளர் குலாம் கைதர் நுராணி நிலக்கண்ணி வெடியில் கொல்லப்பட்டார். இதனால் எதிர்வரும் 18 ஆம் திகதி அத்தொகுதியில் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குலாம் கைதர் நுராணி பயணம் செய்த வாகனம் பகல்ராம் வீதியில் நிலக்கண்ணி வெடியில் சிக்கியதில் நுராணியும் அவரது மெய்ப்பாதுகாவலர். மற்றும் கார்ச் சாரதி உயிரிழந்தனர்.

நுராணியின் இடத்துக்கு புதிய வேட்பாளரை நியமிக்க பாரதீய ஜனதாக் கட்சிக்கு தேர்தல் ஆணையகம் ஒரு வாரகால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு இஸ்லாமியக் கிளர்ச்சியாளரே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க)

## லக்னோவில் வாஜ்பாய் வேட்புமனு

புதுடில்லி, செப். 9

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாஜ்பாய் உத்தரப் பிரதேசத்தின்லக்னோ மக்களவைத் தொகுதியில் நேற்று முன் தினம் சுப நேரத்தில் வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தார்.

ஜோதிட வல்லுநர்களும் சமய அறிஞர்களும் கணித்துக் கொடுத்த நேரத்திலே வேட்பு மனுவினை அவர் தாக்கல் செய்தார்.

பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் இந்தத் தொகுதியில் போட்டியிடும் [illegible] மூன்று முறை இத் தொகுதியில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## ஆயர் கார்லோஸ் ஆஸியில் தஞ்சம்

கான்பரோ, செப். 9

கிழக்குத் திமோரின் விடுதலைக்கு குரல் கொடுத்தவரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆயர் கார்லோஸ் பிலோ ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

கிழக்கு திமோரில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து கார்லோஸ் ஆஸ்திரேலியா சென்றுள்ளார்.

கிழக்குத் திமோருக்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பான கருத்துக் கணிப்பின் பின் இடம்பெற்ற வன்செயல்களினால் ஆயரின் இல்லம் தாக்கப்பட்டதுடன் அங்கு தஞ்சம் கோரியிருந்த ஆயிரக்கணக்கான கிழக்கு திமோர் மக்கள் இந்தோனேசிய ஆதரவுப் படைகளினால் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தனர்.

(ஐ-க)

## மேற்றிராணியார் கண்டனம்

புதுடில்லி, செப். 9

இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஒரிஸாவில் ரோமன் கத்தோலிக்கக் குரவர் ஒருவர் கொல்லப்பட்டமைக்கு புதுடில்லி மேற்றிராணியார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் கடிதம் அனுப்பி உள்ளார்.

(ஐ)



பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கும் மத்தியகிழக்கு சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை படத்தில் காணலாம் எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் மெடலின் ஆல்பிறைட் ஆகியோர் பின்னால் நிற்கின்றனர்.

எகிப்தின் செங்கடல் வாசஸ்தலத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 24 மணிநேரத்தினுள் இஸ்ரேலிய நகரில் இரு கார்க் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

(ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பராபரம் சுதாகரன் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் (0906001558)(740543563V) 04—09—99 சனிக்கிழமை இணுவில் ஸ்ரீபரராசபிள்ளையார் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இணுவில் பொதுநூலகத்திலோ அல்லது அண்ணா கோப்பி இணுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (68866)

செல்விலீலாவதி மாரிமுத்து ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (447290359V, 090407528) 30—08—99 அன்று சங்கானை பிரதான வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விதானைவளவு, சித்தன்கேணி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (68852)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

பலாலி மேற்கு வயாவிளானைச்சேர்ந்த சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் என்பவரது தேசிய அ. அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு: யாழ். மாநகர சபை (களஞ்சியப் பகுதி). (68847)

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 68, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், (68846)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டி சந்திக்கு அருகில். (68610)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கே. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T.P. NO. 070 — 212354, 070 — 212383. (68726)

# இரு இளைஞர்கள் காங்கேசன் தடுப்பு முகாமுக்கு

யாழ்ப்பாணம், செப். 9

அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் இருவர் கடந்த 4ஆம் திகதி காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸாரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாச்சிக்குடாவைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிட்டிகரன் என்பவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த தர்மரட்ணம் சுதன் என்பவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். பொலீஸாரால் இவர்கள் கடந்த 4ஆம் திகதி காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


## SPECIAL ENGLISH

### விசேட ஆங்கில மொழிப் போதனை

மாலை வகுப்பு

சனி, ஞாயிறு 2-30 — 4-30 மணி ஆரம்பமாகிவிட்டது

காலை வகுப்பு

சனி, ஞாயிறு 10-30 — 12-30 மணி

ஆரம்பம்: 11 - 09 - 99

ஆசிரியர்: த. ந பஞ்சாட்சரம்

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (68872)



## வாழ்த்துகின்றோம்

கடந்த 1983 ஆம் ஆண்டு தொடக்கம், யாழ்.மாவட்ட நீதி நிர்வாகப் பிரிவின், சமாதான நீதிவானாக நியமனம் கிடைக்கப்பெற்று, கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்னும் உயர்ந்த இலட்சியங்களுடன் கடமையாற்றி வருபவரும், பொதுநல சமூக சேவையாளருமாகிய, கோப்பாய் ''சமூக இரத்தினம்''

**திரு. எம். கே. இளையப்பு JP**

அவர்களுக்கு 74 ஆவது அகவை ஆரம்பமாகியதை அறிந்து மகிழ்வுறுவதுடன் இவரது பணிகள் மேலும் சிறக்கவும், நீடூழி வாழவும் வாழ்த்துகின்றோம்.

சுபம்

''ஞானபண்டித சேவாசுரபி''
வைத்தியகலாநிதி,
டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை,
மாவட்ட வைத்திய அதிகாரி,
பருத்தித்துறை.

(68870)


## வலி. வடக்கு மக்களினதும் வன்னி மக்களினதும் துயர் துடைக்க இறை அருள் வேண்டிப் பிரார்த்தனை

காலம்: 1999 – 09 – 11 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 8-30 மணி

இடம்: இளவாலை புனித அன்னம்மாள் தேவாலயம் (பெரிய கோயில்)

★ வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து, சுதந்திரமான. அமைதியான வாழ்வை மேற்கொள்ளவும்.

★ வலி. வடக்கு மக்களின் சொந்த நிலத்தை சுவீகரிக்க எடுக்கும் முயற்சியை மீளப்பெறவும்.

★ வலி. வடக்கு மக்கள் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களில் சுயமாக வாழும் நிலை ஏற்படும் வரையாவது உணவு மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

★ தமது இருப்பிடங்களில் சுயமாக வாழ முடியாமல் வன்னியில் துயருறும் மக்களின் துன்பங்கள் நீங்கவும்.

இறையருள் வேண்டி நடைபெறவிருக்கும் பிரார்த்தனையில் அனைத்து மக்களையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம்

தெல்லிப்பழை. [சி/8858]

## பகிரங்க ஏல விற்பனை

### சுகாதாரத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தில் கீழ்வரும் பொருள்கள் 27 – 09 – 99 ஆம் திகதி முற்பகல் 11. 00 மணியளவில் எமது திணைக்கள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலத்தில் பொருள்களை பெறுபவர்கள் பணத்தை செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப் படுத்த வேண்டும். பொருள்களை பார்வையிட விரும்புவோர் அன்று காலை 9. 00 மணியில் இருந்து பார்வையிடலாம்.

1) பாவித்த வாகன ரயர், ரியூப்
2) பாவித்த வாகன பற்றறிகள்
3) பாவித்த றோணியோ மெசின்
4) பாவிக்க முடியாத குளிர்சாதனப் பெட்டிகள்
5) வெற்றுக் கான்கள் (பிளாஸ்டிக் ரியூப்புகள்)
6 ஒரு தொகை உரப்பைகள், திரிபோஷா வெற்றுப் பைகள்.

வைத்தியகலாநிதி க. தா. சிவபாதம்
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (சி/8854)


## Uduvil Girls' College

Cordially Invites you for her

175th

**Anniversary Celebrations**

Praise Service – 12th Sept. 1999 at 3.30P.M
Preacher –
Rt. Rev. Dr. S. Jebanesan

15th Sept. at 9 30 A.M.
Chief Guests –

Prize Giving - Prof. P. Balasundarampillai
(Vice-Chancellor, University of Jaffna)
&
Mrs R. Balasundarampillai

Exhibition, – 17th Sept. – 18th Sept. 1999

Cultural Programmes, Fun and Frolic 9. A. M - 6P. M

– Principal

Uduvil Girls' College
Chunnakam.

(சி/8837)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன சூளைப் பகுதி ஊழியர் ஆகிய


அமரர் **பொ. சிவலிங்கம்**

அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன்,
சிமெந்துக் கூட்டுத்தாபனம்.

[68840]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 20 — 03 — 1958

இறப்பு 10 — 08 — 1999

அமரர் **பொன்னு சிவலிங்கம்**

(ஊழியர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

''மரணம் மனித வாழ்வின் முடிவல்ல
ஒரு புதிய ஆரம்பத்தின் இறுதி அத்தியாயம்''

மாதங்கள் பலவானாலும்
அணையாத எம் குலவிளக்கே!
கூடி வாழ்வோம் என்றிருக்க
எம்மை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அன்பினை அள்ளி ஊட்டும்
அருமையாம் நெஞ்சமெங்கே?
அள்ளியே கொடுத்த கைகள்
அழிந்ததோ எங்கே, எங்கே?
தவியாமல் தவிக்கின்றோம்
தங்கள் முகம் காணாமல்
மாதம் ஒன்று மறைந்தாலும்
மறையாது தங்கள் ஞாபகம்!

பிரிவால் துயருறும்:

| | |
|---|---|
| மனைவி: | தனலட்சுமி |
| பிள்ளைகள்: | கிருஜா, சிவசர்மன், கௌதமன் |
| சகோதரர்கள்: | தேவன், கந்தசாமி (இத்தாலி), யோகராசா (கனடா) |
| சகோதரிகள்: | கமலாதேவி. சிவயோகம்(சுவிஸ்) |
| மைத்துனி: | லதா (கனடா) தனலட்சுமி, வதனா, ராசாத்தி, ஜெயந்தி, சுதா |
| மைத்துனர்கள்: | யோகராசா(சுவிஸ்), பாஸ்கரன், மதிநேசன், அருள்நேசன், ராசன் |
| பெறாமக்கள்: | ரேகன், ரேணுகா, மனேஷன், சபீஷா |
| மருமக்கள்: | வினிதா, கஜீதா, கிருஷன், சிந்துஷன், ஞானேஸ்வரன், தேனிமலர் |

ஞானசம்பந்தர் லேன்,
உரும்பிராய் மேற்கு.

தகவல்; கமலாதேவி

[சி/8860]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள வேலை நிறுத்தம் செய்ய வடபிராந்திய பஸ் ஊழியர்கள் முடிவு

## நிலைமையை விளக்கி சிவில் அதிகாரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செப். 9

1996 முதல் 1998 வரையான காலப்பகுதிக்குரிய இடர்காலக் கொடுப்பனவை வழங்கக் கோரி வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களினால் மகஜர் ஒன்றும் யாழ். சிவில் நிர்வாகப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இடர்காலக் கொடுப்பனவு குறித்து பல தடவைகள் தொழிற்சங்க ரீதியாகவும் தொழிலாளர் ரீதியாகவும் ஜனாதிபதிக்கும் போக்குவரத்து அமைச்சர், தமிழ்க் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தோம்.

எனினும் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்திலேயே மனவிரக்தியடைந்த நிலையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தோம்.

அதேவேளை தாங்கள் எம்மையும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் முகாமையாளரையும் அழைத்து எமது கோரிக்கை நியாயபூர்வமானது என ஏற்றுக்கொண்டதுடன் இரண்டு மாத காலத்துக்குள் இடர்காலக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும்—

அதற்காகப் போக்குவரத்து அமைச்சர் மற்றும் ஸ்ரீலங்கா மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளப் போவதாகவும் அறிவித்திருந்தீர்கள். இதற்கமைய எமது ஒரு நாள் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

பின்னர் மத்திய போக்குவரத்துச்சபை 1996 முதல் 1998 வரையான காலங்களுக்கு இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான திரட்டு நிதி பற்றிய விவரத்தை வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடமிருந்து பெற்றுக்கொண்டது. இந்த நடவடிக்கையின் மூலம் எமக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நம்பியிருந்தோம். ஆனால் இன்றுவரை எமக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாகத் தங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கும் நினைவூட்டல் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தோம். எவரிடமிருந்தும் எந்தவிதமான பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே மீண்டும் எம்மைவிரக்தி நிலைக்குத்தள்ளியதால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மகஜரில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் 1996 இற்குப் பின்னர் எதிர்நோக்கிய பல்வேறு இடர்பாடுகள் குறித்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-7)

## சலவைத் தொழிலாளரின் கிணறுகள் புனரமைப்பு

வலி. கிழக்கு செப். 9

சலவைத் தொழிலாளர்களின் நன்மைகருதி புத்தூர்ப் பகுதியில் உள்ள சலவைத் தொழில் செய்யும் பகுதியில் பழுதடைந்துள்ள கிணறுகள், தொட்டிகள் என்பன 80 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

சலவைத் தொழிலாளர்கள் அதிகம் தொழில் செய்து வரும் புத்தூர் நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் உள்ள கிணறுகள், தொட்டிகள் என்பனவே பிரதேசசபை நிதிமூலம் 80 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்ட இளைஞர் புனர்வாழ்வு கூட்டுறவுச் சங்கக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட இளைஞர்களுக்கு உதவும் பொருட்டு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தில் இதுவரையும் 166 பேர் அங்கத்தவராகச் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## வேலணையில் 50 வீடுகள் கட்டப்படும்

வேலணை, செப் 9

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கெனச் சுமார் 50 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

கிராமசேவையாளர்களினால் சிபார்சு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளதாகவும்—

ஒவ்வொரு வீட்டுக்குமெனச் சுமார் ஒரு லட்சத்து ஏழாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும்— தெரிவிக்கப்படுகின்றது.

புங்குடுதீவுப் பகுதியில் 10 வீடுகளும், வேலணை மேற்கு அம்பிகை நகர் பகுதியில் 21 வீடுகளும், வேலணை தென் கிழக்கு நேதாயி சனசமூக நிலையப் பகுதியில் 19 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

(ஐ-167-111)

## குடாக்கடலில் மீன் பிடிக்கும் கடற் பிரதேசம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். கடலேரியில் யாழ். வெளிச்சவீட்டுப் பகுதியில் இருந்து மண்டைதீவு வரை இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை மீன்பிடிக்க பாதுகாப்புத்தரப்பு மீனவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு ஒன்றை பலாலி படைத் தலைமையகம் விடுத்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை கடற்றொழில் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை கடந்த 3ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3.5)

## கும்பாபிஷேகம்

சங்கானை மேற்கு நிற்சாமம் அருள்மிகு ஞானவைரவர் திருக்கோயில், புனராவர்த்த பிரதிஷ்டா அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும்.

இதற்கான கிரியைகள் நாளை 10 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. [ஐ-15]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் நோக்கி 17 — 12 — 1938



விண் நோக்கி 21 — 08 — 1998

அமரர்

**செல்லையா இராசேந்திரம்**

(Ret P. H F A Haalth Dept.)

திதி: 09 09-99

ஆண்டுகள் தேயலாம்,
உங்கள் நினைவோ எம்மிடமிருந்து தேய்வதில்லை
உங்கள் ஆத்மா இறையடி இணைய
இறைவனை இறைஞ்சும்

அன்பு மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், மைத்துனர் மைத்துனிமார், உறவினர்கள், நண்பர்கள்

மின்னேரி மகால்,
தபாலக வீதி,
சாவகச்சேரி.

(சி/8834)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி ரதி சந்திரநாதன்

அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா திருச்செல்வம்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(68856)

## நீங்காத நினைவதிலே 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 18 — 06 — 1933

உதிர்வு 20 — 08 — 1990

தோலகட்டி — வயாவிளான்

அமரர்

**வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி.)

திதி: 1999-09-09

அன்பு அப்பாவே! ஆண்டுகள் ஒன்பது சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது.

பாசமுள்ள தந்தையாய், கடமைமிகு தலைவனாய் எமக்கு வழி காட்டிய அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய கந்தன் தீர்த்தத்தில் உங்கள் காலடியில் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்தும்:


அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

அரசடி 4 ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(68829)

## 9 ஆம் ஆண்டு எமது விழிநீர் அஞ்சலி

தோற்றம் 24 — 07 — 1947



மறைவு 20 — 08 — 1990

அமரர்

**கந்தையா ரவீந்திரன்**

(ஆசிரியர் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

திதி: 09-09-1999

எம் உயிரினும் மேலான செல்வமே!
மங்காத சோதியே, சுடரே!
ஐயா!
நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தோம்
நினையா தொரு போதுமிருந்தறியோம்.
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

வேலணை - 01.

(68860)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை
திருமதி ரதி சந்திரநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கந்தையா திருச்செல்வம்


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
பெற்றோர், பழைய மாணவர்கள்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(சி/8855)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 21 – 03 – 1978



காலன் பிடியில் 15 – 09 – 1996

செல்வன்

### சந்திரசேகரம் சந்திரகாந்தன்

(மாணவன், மகாஜனக் கல்லூரி)

மூன்று ஆண்டுகள் சென்றால் என்ன' எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உமது நினைவுருவம் எம்மை விட்டு என்றும் நீங்காது காந்தா.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திக்கும்.

அன்பு அம்மா, அண்ணமார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்

பன்னாலை,
தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி:-
இளவாலை வடக்கு

[68834]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கொட்டடி

### அமரர் மா. செல்லப்பா

தோற்றம்: 1917
மறைவு: 09 – 09 – 1998

தங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
Mrs. M. Chellappah,
24, Hanover Rise,
Britannia Road,
Surbiton, Surrey, U.K.

[சி/8724]

## வீதி புனரமைப்பு

வலி கிழக்கு, செப். 9

அச்சுவேலி செல்வ நாயக புரம் குடியேற்றத்திட்டத்திற்குச் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. மிக நீண்டகாலம் பாவனையின்றி இருந்த இந்த வீதி கோப்பாய் பிரதேச செயலர் ஊடாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நுண் கருத்திட்டத்தின் கீழ் 5லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இக் குடியேற்றத் திட்டத்தில் 55 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ளன.

## சனசமூக நிலைய சமாசக் கூட்டம்

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் சமாசத் தலைவர் இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இக் கூட்டத்திற்கு ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் 5 பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு சமாசத் தலைவர் கேட்டுள்ளார்.

தீவக மக்களின் குடி தண்ணீர் பிரச்சினை, தீவக வளங்களைப் பயன்படுத்தி தீவகத்தினை கட்டியெழுப்ப எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், சனசமூக நிலையங்களினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், போன்ற விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-167)

## திருத்தம்

உதயன் 06—09—99 ஆம் திகதிய இதழின் எட்டாம் பக்கத்தில் வெளிவந்த புத்தூர் கமநல கேந்திர நிலையத்தினரின் நினைவஞ்சலி விளம்பரத்தின் அடியில் கமநல கேந்திர நிலையம் நல்லூர் என தவறாகப் பிரசுரமாகி விட்டது கமநல கேந்திர நிலையம் புத்தூர் என திருத்தி வாசிக்கவும் (ஆ-ர்)

## நல்லூர் வணிகர் கழகம்
## 1999 ஆம் ஆண்டு
## பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத்தெரிவும்


நாள்: 19-09-99 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10.30 மணி (ஸ்ரீலங்கா நேரம்)
இடம்: யா/திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

சகல கழக அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

நல்லூர் வணிகர் கழகம்

(68808)




குதிகால் வெடிப்புக்களுக்கு விரைவாக நிவாரணம் அளிக்கிறது க்ராக் க்ரீம் மட்டுமே.




குதிகால் வெடிப்புக்கு விசேஷமான நிவாரணம்

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்.
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8847)

துன்னாலை

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
## மகோற்சவ விஞ்ஞாபனம் - 1999

### கொடியேற்றம்: 10-09-1999 வெள்ளி நண்பகல் 12 மணி

உள்வீதி உற்சவங்கள்

| | |
|---|---|
| 2 ஆம் உற்சவம் | 11 – 09 – 99 |
| 3 ஆம் உற்சவம் | 12 – 09 – 99 |
| 4 ஆம் உற்சவம் | 13 – 09 – 99 |
| 5 ஆம் உற்சவம் | 14 – 0 – 99 |
| 6 ஆம் உற்சவம் | 15 – 09 – 99 |

வெளிவீதி உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| 7 ஆம் உற்சவம் | முதல் வெளிவீதி | 16 – 09 – 99 |
| 8 ஆம் உற்சவம் | பிள்ளையார் தரிசனம் | 17 – 09 – 99 |
| 9 ஆம் உற்சவம் | திருவெண்ணெய் திருடல் | 18 – 09 – 99 |
| 10 ஆம் உற்சவம் | துகில் திருடல் | 19 – 09 – 99 |
| 11 ஆம் உற்சவம் | பாம்பு நடனம் | 20 – 09 – 99 |
| 12 ஆம் உற்சவம் | மகாகம்சன் ஸ்ரீ கிருஷ்ணன் போர்விழா | 21 – 09 – 99 |
| 13 ஆம் உற்சவம் | வேட்டை | 22 – 09 – 99 |

பிரதான உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 14 ஆம் உற்சவம் | சப்பறம் | 23-09-99 | வியாழக்கிழமை |
| 15 ஆம் உற்சவம் | தேர் | 24-09-99 | வெள்ளிக்கிழமை |
| 16 ஆம் உற்சவம் | சமுத்திரதீர்த்தம் | 25-09-99 | சனிக்கிழமை |
| 17 ஆம் உற்சவம் | கேணித் தீர்த்தம் | 26 09-99 | ஞாயிற்றுக்கிழமை |

மாலை கொடியிறக்கம்

உற்சவ நிறைவு விழா

ஆஞ்சநேயர் மடை 27 - 09 - 99 திங்கட்கிழமை மாலை 6.00 மணி

தேர்: வசந்த மண்டப பூசை காலை 8.30 சுவாமி தேரில் ஆரோகணம் காலை 10.00 மணி

தீர்த்தம்: சுவாமி சமுத்திர தீர்த்தம் நோக்கி மாலை 3 மணிக்கு புறப்படுவார்

ச. தேவதாசன்,
தர்மபரிபாலன சபை சார்பாக.

(68838)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## விசுவாசமற்ற அக்கறையா?

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் திறக்கப்பட வேண்டும் — இயங்குவதற்கு வகை செய்யப்பட வேண்டும் — என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் குடாநாட்டில் உள்ள படை உயர் அதிகாரிகளைச் சந்தித்து, மக்களின் குறைபாடுகளையும் தேவைகளையும் அவர்களிடம் எடுத்துக் கூறிய சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இவ்விடயத்தை முதன்மைப்படுத்திக் காட்டியுள்ளது.

குடாநாட்டில் மீண்டும் இப்போது சந்தேகத்தின் பேரிலான கைதுகள் அதிகரித்து வருகின்றன. அவ்வாறு கைது செய்யப்படுவோர் நீதிமன்ற விசாரணைக்காக அனுராதபுரத்துக்கு (சமீப காலமாக வவுனியாவுக்கு) அனுப்பப்படுகிறார்கள். அதனால் அவர்களின் உறவினர்கள் படும் இன்னல்களும், சிரமங்களும், துன்பங்களும் எண்ணில் அடங்கா. குடாநாட்டுக்கு வெளியே அனுப்பப்படும் ''சந்தேக நபர்கள், என்று முத்திரை குத்தப்பட்டோர் படும் அவலங்களும் அவதிகளும் பலமடங்கு.

குடாநாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே குற்றம் புரிந்தவர்களாகப் படையினராலும் பொலீஸாரினாலும் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

அதனால் அவர்கள், மேல் நீதிமன்றம் ஒன்றிலேயே ஆஜர் செய்யப்பட வேண்டிய சட்டத் தேவை உண்டு. ஆனால் இங்கு மேல் நீதிமன்றம் இயங்குவதற்கு வகை செய்யப்படவில்லை

யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஏனைய நீதிமன்றங்களைப்போலவே இயங்கி வந்தது. அனேகமாக 1990 ஆம் ஆண்டிலிருந்தே அது இயங்கவில்லை. இப்போதும் மேல் நீதிமன்றம் செயற்படக்கூடிய அளவுக்கு அதிகாரிகள், பணியாளர்கள் இங்கு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். நீதிபதி ஒருவரை நியமித்தால் அது இயங்கத் தொடங்கிவிடும்.

ஆனால் அரசாங்கம் அதில் அக்கறைகொண்டதாக இல்லை. தமிழர்களுக்குக் கொடுப்பதற்கென'வகுக்கப்பட்ட தொல்லைப் பட்டியலில்' அவர்களின் சொந்தப் பிரதேசங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்களை வெளியிடங்களுக்கு அனுப்பி இன்னற்படுத்துவதும், இம்சைப்படுத்துவதும் அடங்குமா?

இல்லையேல்,சிவில் நிர்வாகம் போன்று நீதிநிர்வாகமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறதென்று காட்டிக் கொள்வதற்காக, ஒரு சந்தர்ப்பத்தில் அவசரப்பட்ட அரசாங்கம், மேல் நீதிமன்றம் குறித்து அக்கறை, கவனம் கொள்ளாதது ஏன்? யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றத்தைச் செயற்பட வைத்தால் இப்பகுதி மக்களுக்குத் தொல்லைகளையும்சிரமங்களையும் கொடுக்க முடியாது போய் விடும் என்று அரசு எண்ணியதா......?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்களை மட்டுமன்றி, குற்றக் கோவைச் சட்டத்தின் பிரகாரம் கைதுசெய்யப்படும் சில வகையினரின் விசாரணையை நீதிவான் நீதிமன்று அல்லது மாவட்ட நீதிமன்றிலிருந்து மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட வேண்டியிருப்பதும் உண்டு.

மேல் நீதிமன்றத்தை யாழ்ப்பாணத்தில் இயங்கச் செய்வதில் கவனம் செலுத்தாதிருப்பது அரசுக்கு இப்பகுதி மக்கள் மீது விசுவாசம் நிறைந்த அக்கறை இல்லை என்பதன் வெளிப்பாடே என்று கொள்ளலாம் அல்லவா?

## பெரும் மாற்றங்களும் வளர்ச்சியும் கண்டுவரும்

# மேற்கத்தைய மருத்துவக் கல்வியும் பயிற்சியும்

யாழ். மருத்துவ சங்கத்தின் 11 ஆவது வருடாந்த மாநாடு இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு யாழ் தாதிய பயிற்சிக் கல்லூரியில் நடை பெறுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

வைத்திய கலாநிதி க. சிவநேசன்
M B B S (SL), M. D (U. S- A)
வைத்திய சிகிச்சை ஒருங்கிணைப்பாளர்
(யாழ். போதனா வைத்தியசாலை – யாழ். மருத்துவபீடம்)

மேற்கத்தைய மருத்துவக் கல்வியும் பயிற்சியும் தொழிலும் சமீபகாலத்தில், குறிப்பாக கடைசிக்கால் நூற்றாண்டில் பாரிய வளர்ச்சிக்கு — பெரிய மாற்றத்துக்கு — உட்படுத்தப்பட்டுள்ளன. இது அந்தந்த இடத்திலுள்ள சமுதாயத்தை பாதிக்கும் பிரச்சினைகளையே மையமாக வைத்து செயற்படுகிறது. உலகில் பல்வேறு இடங்களில் உள்ளகாலநிலை, சூழ்நிலை, சமுதாய பொருளாதார ஏற்றத்தாழ்வு, வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்களுக்கேற்ப நோய்களும் கூடிக்குறைந்து மாறுபட்டுக் காணப்படுகின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு, அத்துடன் அந்நாட்டில் சனத்தொகையும், மருத்துவக்கல்வி, பயிற்சி, தொழில் ஆகியவற்றின் தன்மையை தீர்மானிக்கிறது. மற்றத்துறைகளில் உள்ளது போல் இதிலும் தனியார், அரசாங்கப் பிரிவுகள் உள்ளன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அரசாங்கக் கட்டுப்பாடும், வளர்ச்சியடைந்த தொழில் மயமான செல்வந்த நாடுகளில் தனியார் துறையும் மிகவும் சக்தி வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

சில இடங்களில் மதசார்பாகவும்வியாபாரநோக்குடனும் மருத்துவக்கல்வியும் பயிற்சியும் நடத்தப்படுகின்றன. இதனால் வசதி படைத்த குடும்பங்களில் இருக்கும் மாணவர்கள் இதனைப் பயில வசதியாகவுள்ளது. அனேகமான நாடுகளில், மேற்கத்தைய மற்றும் பிரித்தானிய ஆட்சியை முன்பு உடைய நாடுகளில், ஆங்கில மூலமாகவே மருத்துவக் கல்வி போதிக்கப்படுகிறது. ஆனால் ரஷ்யா, யப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, இஸ்ரேல் மற்றும் இன்னும் பலநாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளில் மருத்துவக்கல்விப் போதனை மிகவும் திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

மருத்துவக்கல்வி தற்போது ஒரு தனித்துறையாக திணைக்களமாக வளர்ச்சி அடைந்துள்ளது. பட்டப்படிப்பு பின் பட்டப் படிப்பு ஆகியவை கூட இதில் பின்பற்றப்படுகிறது. மருத்துவக்கல்லூரியில் கல்வியை ஆரம்பிக்க; தேவையான தகைமை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. முன்னர்பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளில் இருந்து இது தீர்மானிக்கப்படுகிறது. இந்தியாவில் இதற்கு ஒப்பான ஒரு பரீட்சைப் பெறுபேறுகளில் இருந்து இது தீர்மானிக்கப்படுகிறது.

மேலும் சில நாடுகளில் குறிப்பாக, அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகப் பட்டம் (B Sc.) மருத்துவக் கல்வி தொடர வேண்டப்படுகிறது, அப்போது ஒரு மாணவர் தனது 28-29 ஆவது வயதில் தான் ஒரு வைத்தியராக வெளிவர முடிகிறது. ஆனால் மேற்கூறிய நாடுகளில் ஒரு தடங்கலுமின்றி மருத்துவக் கல்வி தொடருமானால் ஒரு மாணவன் தனது 23-24 ஆவது வயதிலும் வைத்தியராகச் சாதாரணமாக வர முடியும். வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் மருத்துவக் கல்விக்கு அதிகமானவர்கள் விண்ணப்பிப்பதாலும் கல்லூரிகளில் அதற்கு ஒப்பாக ஒதுக்கப்பட்ட இடங்கள் குறைவாகக் காணப்படுவதால் மாணவர்கள் அனுமதிக்குப் போட்டி போட்டுப் படிக்கவேண்டியுள்ளது.

### மாற்றங்கள்

மருத்துவக் கல்வி புகட்டும் விதத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாடத்திட்டம் (Curriculum) அதன் குறிக்கோளும் நோக்கங்களும் (Objectives), விரிவுரைகள் கலந்துரையாடல்கள் (Seminar, Symposium Session), செயல்முறை வகுப்புக்கள் (Practicals), கேள்வி கேட்டுப் படிப்பிக்கும் வகுப்புக்கள் (Tutorials) ஆராய்ச்சி (Research) வைத்திய சிகிச்சையை விளங்கப்படுத்தும் செயல்முறை (Clinical Demonstration) ஆகியன மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டு எந்த முறை சிறந்ததாகக் கருதப்படுகின்றதோ மருத்துவக் கல்விப் பிரிவு (Medical Education Unit) அதனை மருத்துவக் கல்லூரிக்குச் சிபார்சு செய்கிறது. இவற்றிலுள்ள குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் விரிவுரைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. தற்போது இது பெரிய மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு முதலாம், இரண்டாம் இறுதி ஆண்டுப் பரீட்சைகளுக்கு முன்பு உள்ள பல்வேறு துறைகளில் பயிற்றப்படுவது மாணவர்கள் மனதில் தெளிவாகப் பதிய வேண்டும் என்பதை மனதில் கொண்டு ஓர் அங்கத்தில் அல்லது தேக உறுப்பில் உள்ள விடயத்தை ஒரே சமயத்தில் பயிற்றப்படுகிறது. [ Horizontal Intergration ] அத்துடன் மிகக் குறிப்பாக எதிர்காலத்தில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானவர்கள் (90%) வைத்திய சிகிச்சையை தமது தொழிலாகச் செய்வர் என்பதால் இதனை மையமாக வைத்து வெறும் புத்தகப் படிப்பில்லாமல் மருத்துவக் கல்வி புகட்டப்படுகிறது. இக்காலத்தில் நோயாளர்களை அந்தந்தப் பகுதிகளில் காட்டி பாடம் போதிக்கப்படுகிறது,

அத்துடன் ஒரு சில மருத்துவக் கல்லூரிகளில் வழமையாக மூன்றாம் வருடத்தில் போதிக்கப்படும் மருந்தியல் (Pharmacology), நோயியல் (Pathology) என்பன ஆரம்பத்தில் இருந்து உடலமைப்பியல் (Anatomy), உடற்றொழியியல் (Physiology), உயிரியல் இரசாயனம்(Bio Chemistry) போன்ற பாடங்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. உடலமைப்பியலில் பிரேதங்களை வெட்டிப் படிப்பதற்கு பதிலாக மிகவும் நுண்ணியமாக சரியாகப் பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட அழகிய செயற்கை அங்கங்களில் இருந்து இது போதிக்கப்படுகிறது.

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே ஆராய்ச்சி செய்ய பயிற்றுவிக்கப்படுகிறார்கள் இன்னும் ஆரம்ப சுகாதாரம் (Primary Health Care), நடத்தல் பற்றிய விஞ்ஞானம் (Behavioural Science), மருத்துவ நீதிநெறி (Medical Ethics), புள்ளி விவரவியல், Statistics), இடை நிலைப் படிப்பு (Intercalated Yeaar) சமூகவியல் Sociology), வைத்தியசாலை நிர்வாகம் (Hospitgl Administration), உயிரியியல் பொறியியல் (Bio Technoloy Medical Engineering), உயிரியியல் தொழில் நுட்பவியல்/ போன்றவை பற்றியும் முன்பு போலன்றி கூடுதலாகப் பாடம் புகட்டப்படுகிறது. அதிமுக்கியமாக, ஆசிரியர் ஒருவர் மாணவருடன் செலவிடும் நேரம் (Student Cotact Time), தொடரும் மருத்துவக் கல்வி(Continuing Medical Education), போன்றவை வலியுறுத்தப்படுகின்றன.

பரீட்சையின் பல பகுதிகள் ( Theory — MCQ & Essay ), செயல்முறைப் பரீட்சைகள் (Practicals/Spots-OSPE, OSCE),

(9 ஆம் பக்கம் பார்க்க)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## தீர்த்தமாடியே வருவாய்!

நல்லைப் பதியுறை நாதா முருகா
நம்துயர் தீர்க்கும் வேலா குமரா
தொல்லை யகற்றிடும் திருவே உருவே
துன்ப மகற்றும் தமிழர் இறைவா
வெல்ல வைத்திடும் விறலே முருகா
வெஞ்சின மாற்றும் பதியே பரமா
கொல்ல வரும்பகை யோடிட நல்லைக்
குமரா தீர்த்த மாடியே வருவாய்

— அனலையூர்ச் சேந்தன்

## திருவருள் புரிவீரே!

தீர்த்தன் மகனே! திருமால் மருகனே!
சீர்த்திகழ் நல்லைச் செவ்வேல் பெருமானே!
ஆர்த்தெழு மடியவர் அல்லல் நீங்கிட
தீர்த்தம் ஆடித் திருவருள் புரிவீரே!

— காரைநகர் நாகமுத்துதாசன்

## நல்லூரான் திருப்பாதம்



அங்குமிங்கும் எங்குந்
திருக்கூத்து அடடா

அதையறிதல் பத்தரைப்
பொன் மாற்று

நல்லூரான் திருப்பாதம்
- அடடா

நமக்குக் குறைவில்லை
நல்லவாக்கு.

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆவணி 24
வெள்ளிக்கிழமை
திதி: பிரதமை
பின்இரவு 3.42 வரை
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 11.27 வரை.
சுபநேரம்: 6.03 –7.33
ராகுகாலம்: 10.33 -12.03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், செப். 9

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தை ஒட்டி துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 5.30 மணிமுதல் 7.00 மணி வரை வீ. செல்லத்துரையின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

அணிசேர் கலைஞர்களாக எஸ். திவாகரன் [வயலின்], எஸ். சிவசிவா, (மிருதங்கம்), வீ. ரமணன் [முகர்சிங்) ஆகியோர் கலந்து கொ வர்.

[ஐ-ரி-30-103]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 9

ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டுவரும் இசைச் சொற்பொழிவில் இன்று 'வைராக்கியசிகரம்' என்ற தலைப்பிலான செற்பொழிவு இடம் பெறும்.

(ஐ-ரி-30-103)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப், 9

அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் வடபிராந்திய இந்துப்பேரவை யாழ். மாவட்டக் கிளையின் ஆதரவில் நடைபெற்று வரும் சொற்பொழிவில் இன்று 'கிரியைகளின் வகையறிந்துவழிபடல்' எனும் தலைப்பில் கை. திருஞானசம்பந்தக் குருக்கள் உரை நிகழ்த்துவார்.

[ஐ-ரி-30-103]

### உதயவாக்கு

எந்த ஒரு கடவுளை வணங்கினாலும் அதை எல்லாக் கடவுள்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

— ஷிண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆஸி. அணி வெற்றி

கொழும்பு, செப். 9

ஆஸ்திரேலிய அணிக்கும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணிக்கும் இடையில் நடைபெற்ற உத்தியோக பூர்வமற்ற 4 நாள் டெஸ்ட் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த பிளிவட் சதம் அடித்தார். (ஐ-ரி)

## பாடசாலை மட்ட உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, செப். 9

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையே சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும்ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

★ விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயம் எதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

★ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

★ மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதயா ம. வி. எதிர் நாவற்குழி ம. வி.

நாளைய கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

16 வயதுப் பிரிவு

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

★ மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய ம.வி. எதிர் வரணி ம வி.

18 வயதுப் பிரிவு

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தில் தெல்லிப்பழைப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையே அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் நாளைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;—

16 வயதுப் பிரிவு

★ மகாஜனக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை கட்டுவன் புலம் ம. வி.

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் ம.வி.

18 வயதுப் பிரிவு

★ மகாஜனக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. [உ-5-86]

★ ★ ★

வலிகாமம் தெற்கு, செப். 9

வலிகாமம் கல்வி வலயத்தில் உடுவில் பிரிவு பாடசாலைகளுக்கு இடையே சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் நாளைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

16 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலணி சைவ ம. வி. எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

★ இணுவில் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ ம. வி.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில்மத்திய கல்லூரி. உ-152]

### பாடசாலை உதைபந்தாட்டம்:

## ஆதரவாளர்கள் மோதல்: போட்டி இடைநிறுத்தம்

அளவெட்டி, செப். 9

வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பழைப் பிரிவுப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இரண்டு பிரபல பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டி விறு விறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதல் காரணமாக போட்டி இடை நடுவே கைவிடப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையில் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயமே ஆதரவாளர்களிடையே மோதல் ஏற்பட்டது. இரு பாடசாலை மாணவர்களும் பிரச்சினைகளில் ஈடுபடாமல் விலகிக் கொண்டனர்.

அப்போது மகாஜனக் கல்லூரி ஒரு கோலைப் போட்டு முன்னணியிலே நின்றிருந்தது.

(உ-13)

## ஆசிய கிரிக்கெட் போட்டி ஏப்ரலில் பங்களாதேஷில்

கொழும்பு, செப். 9

ஆசிய நாடுகளுக்கு இடையில் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமாக உள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் இம்முறையும் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாட்டு அணிகள் பங்குபற்ற உள்ளன.

நடந்து முடிந்த - ஆசிய நாடுகளுக்கு இடையிலான— டெஸ்ட் போட்டித் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பங்குபற்றியதும் —

பாகிஸ்தான் சாம்பியனானதும் குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## இலங்கை - ஆஸி டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்

கண்டி, செப். 9

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஐந்து நாள்கள் நடைபெறும் முதலாவது டெஸ்ட் ஆட்டம் கண்டி அஸ்கிரிய டெஸ்ட் விளையாட்டு மைதானத்தில் இன்று காலை ஆரம்பமாகும்.

இரண்டாவது டெஸ்ட் போட்டி காலியில் 22 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையிலும் —

மூன்றாவது டெஸ்ட் போட்டி 29 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 3 ஆம் திகதிவரை கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்திலும் — நடைபெறும்.

(உ - ரி)


2 சொட்டு மருந்து

கொடிய போலியோ நோய் சிறு பிள்ளைகளை அங்கவீனமாக்க வல்லது. அவர்களது உயிருக்கும் உலை வைக்கக் கூடியது 10 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் எதிர்வரும் தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்கள் இரண்டிலும் போலியோ தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொடுங்கள். இதன் மூலம் இலங்கையிலிருந்து போலியோ நோயை முற்றாக இல்லாது ஒழிக்கலாம்.



2 நாள் கொடுத்தால்

போலியோ கிட்டவும் நெருங்காது

| யாருக்கு? | எப்போது? | எங்கே? |
|---|---|---|
| • 10 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும். | • செப்டம்பர் 11ம் திகதி சனிக்கிழமையும் அக்டோபர் 16ம் திகதி சனிக்கிழமையும். | • கிட்ட உள்ள தடுப்பு மருந்தேற்றும் நிலையத்தில் • உங்கள் பிள்ளையை இரண்டு நாளும் கொண்டு போங்கள். |

JWT

PolioPlus unicef

தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்கள் செப். 11 ஒக். 16

போலியோ நோயை இலங்கையிலிருந்து முற்றாக இல்லாது ஒழிக்க இதோர் ஒரு சந்தர்ப்பம்!

(சி/8826)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி சிந்தனை

கடவுள் உன்னுள் உறைகிறார் என்பதை நீ புரிந்து கொண்டாயானால் தவறான தீய செயல்களில் இறங்குவதற்கு என்றுமே உனக்கு துணிவு வராது. தீய எண்ணங்கள் எல்லாம் வெளிப்புறத்திலிருந்து வந்து. உன்னுள் புகுந்தனவே அன்றி, உன்னுடனேயே பிறந்தவை அல்ல. உன்னைப் பொறுத்தவரை நீ எப்போதுமே, அன்பு மற்றும் தயை இவற்றின் முழு வடிவமே தவிர வேறல்ல.

தீய எண்ணங்கள் எல்லாம் சட்டென்று நகர்ந்து செல்லும் மேகங்களைப் போன்றவை. அவை பார்வையைச் சற்று மறைக்கலாம் சூரியனையே கூட சில நேரம் மறைக்கக்கூடும். சூரியன் கண்ணுக்குத் தற்காலிகமாகத் தெரியாமல் போயினும் அது எப்போதும் பிரகாசித்துக் கொண்டு தான் இருக்கிறது. மேகங்கள் விலகிய பிறகு, உன்னால் சூரியனை முழுமையான ஜாஜ்வல்யத்துடனும், பிரகாசத்துடனும் காண முடியும். அதைப்போலவே இதயத்தை மூடியிருக்கும் அஞ்ஞானத் திரைகளும் அகற்றப்பட வேண்டும்.

ஆதாரம்;- சாயி அருளமுதம்

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, செப். 9

முகமாலை புனித அன்னை வேளாங்கண்ணி மாதா (ஆரோக்கியமாதா) தேவாலய நவ நாள்உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூசையும் நடைபெற்று மறுநாள் காலை 7.00 மணிக்கு திருநாள் பாடற்பலிபூஜையும் திருச் சொரூப பவனியும் இடம்பெறும்.

(க-117-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 9

அல்வாய் வடக்கு மாணிக்கம்பற்றை பூதவராயர் ஆலய (மாணிக்கப்பிள்ளையார்) மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

பூர்வாங்க கிரியைகள் 12 ஆம் திகதி மாலை 6 30 மணிக்கு ஆரம்பமாகி சாந்தி கணபதி ஹோமம் முதலியன நடைபெறும். (க-15-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், கசப். 9

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம்எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப் 9

நவாலி திருவருள்மிகு ஞான வைரவ சுவாமி திருக்கோயிலில் ஆவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மண்டல பூர்த்தியை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறும். சிவஸ்ரீ ந.சுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் சங்காபிஷேகம் இடம்பெறும்.

(இ-7)

# உடற்பயிற்சிக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 9

வடமராட்சி வலய அறவழி மழலைகள் கல்விப் பூங்கா, மழலைகளின் உடற்பயிற்சிக் கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் வி ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறும் கண்காட்சியில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ் .சிவராஜா ,பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ சிவசுவாமி, கரவெட்டிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பொ. விக்னேஸ்வரன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ். சிற்றம்பலம் ஆகியோர் முன்னிலையாளர்களாகக் கலந்து கொள்வர். (க-15)

## பெரும் மாற்றங்..

(7 ஆம் பக்கத் தொடர்)

வாய்மொழி மூல பரீட்சை (Viva/Orals), வைத்திய சிகிச்சை பரீட்சை (Clinical Examination), போன்றவை எந்தெந்த விகிதத்தில் எப்படி நடத்தப்பட வேண்டுமெனவும் பரீட்சை மதிப்பீடுகள் (Evaluation/Assessment), எந்த முறையில் திருத்தப்பட்டு மதிப்பு எண்கள் இடப்பட வேண்டுமெனவும் பல விதத்தில் ஆராய்ந்து அறிவுறுத்தப்படுகிறது. ஒளி, ஒலிக் கருவிகள் Video/Audeo), பாவிக்கப்படுவது இப்பொழுது சர்வ சாதாரணம் ஆகிவிட்டது. மேலும் ஒரு பல்கலைக்கழக வைத்தியசாலையில் நடைபெறும் மாநாடுகள் கருத்தரங்குகள் பேச்சுக்களை அதனை அண்டியிருக்கும் சிறிய, சிறிய வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்கள், கல்வி கற்கும் மருத்துவ பீட மாணவர்கள் கண்டு பயன்பெற தொலைக்காட்சி ஊடாக வசதிகள் Close Circuit - T V), வசதி படைத்த மருத்துவ பீடங்களில் செய்யப்பட்டுள்ளது. இதனால் இதைக் கண்டு பயனடைபவர்கள் வீணாகப் போக்குவரத்துக்குச் செலவிடும்நேரம் தவிர்க்கப்பட்டு, அந்நேரம் வேலைகளிலும் பாடம் படிக்கவும் செலவிடப்படுகிறது. மற்றும் வசதி படைத்த மருத்துவக் கல்லூரிகளிலும் குடும்பங்களிலும் கணனிப் பொறிமுறை மூலம் (Computer Assisted Teaching), மருத்துவக் கல்வி போதிக்கப்படுகிறது. மருத்துவ மாணவர்களை தொடர்ச்சியாக பல்வேறு துறைகளில் மதிப்பீடு செய்ய ஈடுபடுத்துவது முக்கியமாகக் கருதப்படுகிறது.

(வளரும்)

# இளைஞர் கைது

யாழ்ப்பாணம், செப். 9

பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலீஸாரினால் நல்லூர் முத்திரைச் சந்தியில் வைத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ-5)


சுயாழினி

தொலைத் தொடர்பு நிலையம்

Suyalini Communication Centre

233, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு அருகில்)

ஆரம்பம்: 10-09-1999 வெள்ளிக்கிழமை பிறபகல் 3 00 மணி

உள்ளூர்: 021 - 3280

வெளியூர்: 0094 - 21 - 3280

உள்வரும் அழைப்புகளுக்கு நிமிடத்துக்கு 3 ரூபா மட்டும்
உள்ளூர் அழைப்புகள் நிமிடத்துக்கு 7 ரூபா மட்டும்

★ 10-09-1999 முதல் 11-09-1999 வரை உள்வரும் அழைப்புகளுக்குக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

K. ஆறுமுகம்
உரிமையாளர்.

(68882)



எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

★ ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்பு
★ பிரிவு-4 ஆரம்பமாகின்றன. இதுவே இறுதிப் பிரிவாகும்
★ ஆரம்பம் 11-09-99 (மாலை 2.00 மணி)
(30 மணித்தியாலங்கள் நடைபெறும்)

ஆசிரியர்,
அ. குமாரவேல்

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.

(68798)


## கண்ணீர் அஞ்சலி

வணிகத்துறை 3ஆம் வருட B பிரிவு மாணவன்
அ. தயாநிதி
அவர்களின் அன்புத் தந்தையார்

### வல்லிபுரம் அப்பாத்துரை

அவர்கள் 5-9-1999 அன்று இறைபதம் சேர்ந்தார். இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணிகத்துறை 3 ஆம் வருடம் (B)
முகாமைத்துவ வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம். (68888)





புத்தாயிரமாண்டு
இன்னிசை அருவி

Millennium
Musical Show

இதோ!

நீங்கள் ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த

மிகப்பிரமாண்டமான

புத்தாயிரமாண்டு
இன்னிசை அருவி

இன்று முதல் 12ஆம் திகதிவரை மாலை 2 — 5 மணி
(புதிய நேரப்படி)

இடம்: கைலாசபதி கலையரங்கம் யாழ். பல்கலைக்கழகம்

ரிக்கற் கிடைக்குமிடம்: சத்திரசிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை

மேலதிக தொடர்புகளுக்கு: T. P. 3180

குறிப்பு: ★ மண்டபவாயில் 2.00 மணிக்கு மூடப்படும்.
★ ரிக்கெற்றுகளை மண்டபவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/8863)

- மருத்துவபீட மாணவர்கள்


முத்தே! உனையிழந்து ..

## மூன்றாண்டு உருண்டதுவோ....?

மண்மகிழ 22 — 04 — 1972



கண்நெகிழ 12 — 09 — 1996

செல்வன்

### சரவணமுத்து சரவணபவானந்தன்

(வெளிவாரி பல்கலைக்கழக மாணவனும் பிரவேச பண்டிதரும்)

திதி: 09 - 09 - 99

முத்தே யுனையிழந்து மூன்றாண்டு ருண்டதுவோ?
முல்லைச் சிரிப்பிழந்து மூண்டதுயர் தாங்குவமோ?
வித்தே விளைநிலமே விருட்சமாய் நீ வளர்ந்து
விசாலிக்கக் காத்திருந்தோம் விதி முடிந்துஓடினையோ?
நித்தமும் உன்நினைவால் நெஞ்சுருகி வாடி நின்று
நின்னாத்ம சாந்திக்கு நுணுவிலரை இறைஞ்சுகிறோம்
ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

- குடும்பத்தவர்

சரசாலை,
சாவகச்சேரி.

[சி/8861]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org